# உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

**மார்ச்சு 2018**



**தொடர்புக்கு:**

✍ 2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

✆ 62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg


புதிது **ஆண்டு மலர் 2016**
பார்க்க: இணையப் பக்கம்

## உள்ளே...


| உள்ளே... | பக்கம் |
|---|---|
| முயற்சி திருவினை ஆக்கும்.. | 1 |
| படித்ததில் பிடித்தது | 1 |
| பழமொழியும் பிழைமொழியும் | 1 |
| அழகுதமிழ் அறிவோம் | 1 |
| படித்த கதை | 2 |
| மாணவர் கடமைகள் | 3 |
| முன் செல்லடா - விமர்சனம் | 3 |
| பூப்பறிக்க வருகிறோம்! | 3 |
| மாணவர் படைப்புகள் | 2-3 |
| மாதிரிக் கட்டுரை | 2 & 3 |
| பிழையும் சரியும் | 3 |


## முக்கிய நிகழ்வுகள்

- **Tamil Keyboarding Training**
  *மார்ச்சு* 1 & 8
- **1st Term Vacation**
  *மார்ச்சு* 10 & 18
- **Revision of SA1**
  *மார்ச்சு* 26 & 29

## முயற்சி திருவினை ஆக்கும்!

அன்பு மாணவச் செல்வங்களே!
வணக்கம். மார்ச்சு மாதம் தொடங்கியதும் தேர்வு ஆரம்பித்துவிடும். இது தேர்வுக்காலம் என்பதும் நாம் அறிந்த ஒன்றே. இதற்காக நீங்கள் அனைவரும் திடமான குறிக்கோளை முறைப்படி வகுத்துக்கொண்டு அதற்கு ஏற்ப செயல்பட்டு வருகிறீர்கள். உங்களின் முயற்சிக்கு எங்களின் பாராட்டுகள்! ‘முயற்சி திருவினை ஆக்கும்’ என்ற நெறி நம் வாழ்வில் உண்மையாகட்டும்! நீங்கள் உங்களின் அயரா உழைப்பால் பள்ளிப் பாடங்கள் அனைத்திலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவதற்கு எங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இப்படிக்கு*
இதழ்க் குழு

## படித்ததில் பிடித்தது

ஒரு ராணுவப்படை வீரர்கள் கும்பலாக வருகிறார்கள். கண்ணில் பட்டவர்களை எல்லாம் வெட்டிச் சாய்க்கிறார்கள். மக்கள் அலறியபடி பாதுகாப்பான இடத்தை நோக்கி ஓடுகின்றனர்.
தெருவில் இரண்டு கைக் குழந்தைகளுக்கு ஒரு பெண் சாதம் ஊட்டிக் கொண்டிருக்கிறாள். ராணுவப்படை வருவதை அறிந்து குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறாள். ராணுவம் பக்கத்தில் வந்துவிட்டது. இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தையை இறக்கிவிட்டு ஓடினால்தான் அவள் தப்பிக்க முடியும். இரண்டு குழந்தைகளின் முகத்தையும் பார்க்கிறாள். சற்று நேரத்தில் ஒரு குழந்தையை இறக்கிவிட்டு ஒரு குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடுகிறாள்.
இறக்கி விடப்பட்ட குழந்தை அவள் கண்முன்னே வெட்டப்பட்டு மரணிக்கிறது. அவளிடம் ஒரு பெரியவர் கேட்கிறார், "ஒரு தாய்க்கு இரண்டு குழந்தைகளும் சமமானதுதானே! அப்படி இருக்கும்போது எதை வைத்து ஒரு குழந்தையைப் பழி கொடுக்கத் துணிந்தாய்?" என்று. அந்தப்பெண் கண்ணீருடன் சொன்னாள்," என் குழந்தைக்கும் பக்கத்து வீட்டுக் குழந்தைக்கும் சாதம் ஊட்டிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் ராணுவம் வந்தது. பக்கத்துவீட்டுக் குழந்தையை இறக்கிவிட எனக்கு அதிகாரம் கிடையாது.அதனால் என் குழந்தையை இறக்கிவிட்டு பக்கத்து வீட்டுக் குழந்தையைக் காப்பாற்றினேன். "அந்தப் பெரியவர் கண் கலங்கினார்.

## பழமொழியும் பிழைமொழியும்

**"மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே"** என்பது வழக்கில் பயின்றுவரும் பொன்மொழி. ஆனால், **"மண் குதிரை நம்பி, ஆற்றில் இறங்காதே"** என்பதுதான் உண்மையான பழமொழி!
மண் குதிர் என்பது ஆற்று ஓரத்திலும் ஆற்றுக்கு உள்ளேயும் இருக்கும் மண் குவியலாகும். அது மிகவும் மென்மையானது. பார்பதற்கு அதன்மீது கால் வைத்துச் செல்வதற்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் கால் வைத்ததும் அப்படியே உள்ளே போய்விடும். அதனால்தான் மண் குதிரை நம்பி, கால் வைக்காதே என்று நம் முன்னோர்கள் எழுதி வைத்தனர்.

**கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல... உன்னைத் தூங்கவிடாமல் செய்வது எதுவோ? அதுவே கனவு!**
–அப்துல் கலாம்



## படிப்பது எப்படி?

படிக்கப் போகும் பாடத்தை முழுமையாக ஒருமுறை மேலோட்டமாகப் படிக்கவும்.

தலைப்புகளுக்கும் துணைத் தலைப்புகளுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும்.

பின்னர், பாடச் சுருக்கத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.


தொடரும்...


## அழகுதமிழ் அறிவோம்!

**DOWNLOAD**
**பதிவிறக்கம்**
**CHANNEL**
**ஒளிவழி**

**மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

## முத்தமிழ்

இயற்றமிழ்
இசைத்தமிழ்
நாடகத்தமிழ்



# மாதிரிக் கட்டுரை

## ‘தேர்வில் அதிக மதிப்பெண் பெற நான் எடுத்துவரும் முயற்சிகள்!’

நான் இந்த ஆண்டுதான் உயர்நிலைப் பள்ளிக்கு வந்திருக்கிறேன். தொடக்கப் பள்ளியில் பல தேர்வுகளைச் சந்தித்திருக்கிறேன். இவற்றின் மூலம் பல படிப்பினைகளைப் பெற்றுள்ளேன். இவை என்னுடைய வாழ்க்கையில் பல புதிய அனுபவங்களைத் தந்திருக்கின்றன. அதனால், நான் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகிறேன். நான் சந்தித்த தேர்வுகளின் மூலம் பெற்ற அனுபவங்களை இங்கே எழுதப்போகிறேன்.

முதலில் அன்றாடம் ஆசிரியர் வகுப்பில் கற்றுக்கொடுக்கும் பாடத்தை மிகவும் அக்கறையுடன் கவனிப்பேன். என் அருகில் அமர்ந்திருப்பவர்கள் தொந்தரவு கொடுத்தால் அவர்களையும் பாடத்தைக் கவனிக்கும்படி நான் கூறுவேன். என்னுடைய நண்பர்கள் நான் சொல்வதைக் கேட்பார்கள். மேலும் ஆசிரியர் வகுப்பில் கற்றுக்கொடுக்கும் பாடத்தை நான் வீட்டில் சென்று படிப்பேன். இதன் மூலம் என் படிப்பறிவு வளரும். எனக்கு நினைவாற்றலும் வளரும். இவற்றின் மூலம் நான் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று வருகிறேன்.

ஆசிரியர் சொல்லிக்கொடுத்ததை மட்டும் நான் படிக்க மாட்டேன். சொந்த முயற்சியில் தேவையான கருத்துகளைப் புத்தகங்களில் படித்துத் தெரிந்து கொள்வேன். இவற்றின் மூலம் என் பாட அறிவும் வளரும். இது தேர்வில் நான் சிறந்து விளங்க உதவி செய்யும். நான் துணிச்சலுடன் தைரியமாக என்னுடைய சக மாணவர்களிடம் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களைக் கேட்பேன். இவை தேர்வுக்காலங்களில் எனக்கு உதவி செய்யும்.



நான் என்னுடைய பெற்றோரிடம் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். அவர்கள் எனக்கு எந்த நேரத்திலும் உதவி செய்வார்கள். இது என்னுடைய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். மேலும் நான் தொடர்ந்து பயிற்சி செய்வேன். வினாக்களுக்குரிய விடைகளை எழுதிச் சரி பார்ப்பேன். இது தேர்வு நேரங்களில் எனக்குத் தைரியத்தைக் கொடுக்கும். புதிய புதிய பயிற்சிகளில் ஈடுபடுவதால் கடினமான கேள்விகளை எப்படி அணுகவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வேன்.

இறுதியாக நான் ஒரு கால அட்டவணையைத் தயாரித்துக்கொள்வேன். அந்த அட்டவணை எனக்கு நேரத்தைக் கடைப்பிடிப்பதற்கு மிகவும் உதவி செய்யும். மேலும் முறைப்படி படிப்பதற்கும் இது மிகவும் உதவி செய்யும். நான் தொடர்து படித்துக்கொண்டே இருக்க மாட்டேன். ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் கட்டாயம் ஓய்வு எடுப்பேன். என்னுடைய உடம்பையும் நன்றாகப் பார்த்துக்கொள்வேன். இது நான் பாடங்களைத் தயாரிக்கும்போது எனக்குப் புத்துணர்ச்சியைத் தரும்.

நாம் ஒவ்வொருவரும் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குப் பலவிதமான பயிற்சிகளில் ஈடுபடுவோம். எல்லோராலும் ஒரே மாதிரி படிக்க முடியாது. எனவே, நாம் நிறைய மதிப்பெண்கள் பெறுவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பின்பற்றினால் நிச்சயம் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

**ஐஸ்ரா 1 உயர்தமிழ்**

# படித்த கதை!

‘நல்ல பண்பு’ என்ற இக்கதையில் ஒரு குரங்கு கப்பல் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தது. திடீரென்று பெரிய புயல் காற்று வீசியது. கப்பல் கடலில் கவிழ்ந்தது. குரங்கிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அது உடனே கடலில் குதித்தது. அது உயிர் பிழைப்பதற்குப் போராடிக்கொண்டிருந்தது. இதைத் தண்ணீரில் மிதந்துகொண்டிருந்த டால்பின் ஒன்று பார்த்தது. அது குரங்கின் மீது இரக்கம் கொண்டது. அதனால் குரங்கைக் காப்பாற்ற நினைத்தது. டால்பின் கடலில் வேகமாக நீந்திச் சென்று குரங்கைத் தன் முதுகின்மீது ஏற்றிக்கொண்டது. குரங்கு மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. டால்பின் குரங்கைச் சுமந்து சென்றது.

டால்பின் கரையின் ஓரத்திற்கு நீந்திச் சென்றது. கரையின் ஓரத்தில் இருந்த மரத்தில் பல குரங்குகள் விளையாடிக்கொண்டிருந்தன. இதனை டால்பின் மீது இருந்த குரங்கு கண்டது. அது உடனே தரையில் குதித்துச் சென்றது. அருகில் மரத்தில் இருந்த தன்னுடைய இனத்துடன் அது சேர்ந்து கொண்டது. இதனை டால்பின் கவனித்துக்கொண்டிருந்தது. அது மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. ஓர் உயிரைக் காப்பாற்றியதற்குப் பெருமைப்பட்டது. அதே நேரத்தில் நன்றி சொல்ல மறந்த குரங்கை நினைத்து மிகவும் வருந்தியது.

இந்தக் கதை, நமக்கு ஒருவர் சிறிதளவு உதவி செய்தாலும் அவரை என்றும் மறக்காமல் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறியதை நினைவுபடுத்தியது.

.

**விஷ்வா 1 உயர்தமிழ்**

# வேண்டும் வேண்டாம்

அன்பு வேண்டும் அறிவு வேண்டும்
பண்பு வேண்டும் பரிவு வேண்டும்
எட்டுத்திக்கும் நற்புகழ் வேண்டும்
இல்லாமை எங்கும் ஒழிய வேண்டும்!

கர்வம் வேண்டாம் களம் வேண்டாம்
சூது வேண்டாம் சூழ்ச்சி வேண்டாம்
மறதி வேண்டாம் தன்னலம் வேண்டாம்!
மற்றவரைத் தாழ்த்திப் பேச வேண்டாம்
மனம் நொந்து கொள்ள வேண்டாம்!!

**பிரசித்தா 1 உயர்தமிழ்**

பெற்றோர் பாசம் வேண்டும்
பேரன்பு எனக்கு வேண்டும்
ஆசிரியர் பாராட்டு வேண்டும்
நல் மழை வேண்டும்
மாலை தென்றல் வேண்டும்!!



கடும் வெயில் வேண்டாம்
கடும் கோபம் வேண்டாம்
கல்லாமை என்றும் வேண்டாம்
இல்லாமை எங்கும் வேண்டாம்!!

**ஸ்ரீ ரவீனா 1 உயர்தமிழ்**

# என் நண்பன்

ஆபத்துக்கு உதவுபவன் நண்பன்
அன்பைப் பொழிபவன் நண்பன்
அறிவை வளர்ப்பவன் நண்பன்
ஆத்திரம் ஒழிப்பவன் நண்பன்!



இதயத்தில் இருப்பவன் நண்பன்
இறைவன் கொடுத்தவன் நண்பன்
குடும்பத்தில் ஒருவன் நண்பன்
கோவிலைப் போன்றவன் நண்பன்!!

**கீதா 1 உயர்தமிழ்**



உடலில் சுமந்து
உயிரைப் பகிர்ந்து
உருவம் தந்த
தெய்வம்
அம்மா!

# படி!


படிப்பின் அவசியத்தையும் மேன்மையையும் வலியுறுத்தும் ஒரு கவிதையை வாசிக்க நேர்ந்தது. அந்தக் கவிதையும் அதன் பொருளும் என்னை மிகவும் கவர்ந்தன. அந்தக் கவிதையை அடிப்படையாகக் கொண்டு அதே மாதிரி வடிவில் ஒரு கவிதையை எழுத விரும்பி எழுதினேன். இதோ! அந்தக் கவிதை...

‘படி படி படி அதுவே வெற்றிப்படி!
அன்னை சொன்னபடி
அனைவரிடமும் பழகும்படி!
தந்தை சொன்னபடி
வாழ்க்கையில் அனுபவமே
சிறந்த படிப்பு எனும்படி!
ஆசிரியர் சொன்னபடி
நல்லொழுக்கத்துடன் வாழும்படி!
கலாம் ஐயா சொன்னபடி
தினமும் ஒரு நல்ல நூலை வாசிக்கும்படி!
ஆம்! படி படி படி அதுவே வெற்றிப்படி!



**யுவராஜ்**
**உயர்நிலை 3 உயர்தமிழ்**

## மாணவர்களின் கடமைகள்



மாணவர்களின் கடமைகள் என்று சொல்லும்போதே எனக்கு முதலில் நினைவுக்கு வருவது படிப்பின்மீது அக்கறை காட்டுவது ஆகும். இது மாணவர்கள் அனைவருக்கும் மிகவும் பொருந்தும் என்று நான் கூறுவேன். பொதுவாக இக்காலத்தில் மாணவர்கள் வீட்டுப்பாடங்களைச் செய்து பள்ளிகளில் ஒப்படைப்பதையே பெரிய வேலையாக நினைக்கிறார்கள். அவர்கள் அதிகமாகச் சோம்பலாக வாழ்கின்றார்கள். எனவே, சோம்பேறித்தனத்தை ஒழித்துப் படிப்பின் மீது அக்கறை கொள்ளும் மனப்பான்மையை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் நேரம் தவறாமையைப் பின்பற்றவேண்டும். இப்பழக்கம் அவர்கள் பெரியவர்களாக மாறும்போதும் மிகவும் உதவி செய்யும். நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்கும் பலர் வாழ்க்கையில் மிகவும் முன்னேற்றம் அடைந்து வருவதை நாம் காணலாம். இது நம்முடைய முன்னேற்றத்திற்கு மிகவும் உதவி செய்யும். அடுத்ததாக மாணவர்கள் பள்ளிக்கு முறையாகச் செல்லவேண்டும். பள்ளியின் முழுச் சீருடையில் செல்ல வேண்டும். தாமதமாகச் செல்லக்கூடாது. ஆசிரியர்கள் பாராட்டும் வண்ணம் ஒழுக்கத்துடனும் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களை ஒருபோதும் எடுத்தெறிந்து பேசக்கூடாது. நம்மை வளர்த்து வரும் பெற்றோர்கள் மாதிரி அவர்கள் நமக்குப் பலநிலைகளில் உதவி செய்து வருகின்றனர். மேலும் மாணவர்கள் மிகவும் பணிவன்புடன் நடந்துகொள்ளும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பள்ளியில் ஒரு முக்கியமான நடவடிக்கை இணைப்பாட நடவடிக்கை . மாணவர்களில் பலர் விருப்பத்துடன் இணைப்பாட நடவடிக்கைக்குப் போவதில்லை. இணைப்பாட நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் பயன்களையும் கட்டாயம் புரிந்துகொள்ள வேண்டும். இதுவும் மாணவர்களின் கடமைகளுள் ஒன்று ஆகும். மற்றொரு முக்கியமான கடமைகளுள் ஒன்று நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவது ஆகும். இக்காலத்தில் வெளிப்புற நடவடிக்கைகள் பல தீமைகளைத் தருகின்றன. அதனால், நல்லது கெட்டது பற்றி நன்கு அறிந்துகொள்ள வேண்டும். மேலும், ஊதாரித்தனமாகச் சுற்றித் திரியக்கூடாது. பெற்றோர்கள் சம்பாதித்துக்கொடுக்கும் பணத்தையும் வீணாக்கக்கூடாது. அவர்களின் கடின உழைப்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இக்கால மாணவர்கள் வருங்காலத் தலைமுறையினருக்கு முன் உதாரணமாக இருப்பவர்கள். மாணவர்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும். அவர்கள் சமூக சேவையில் ஈடுபடும்போது பல புதிய அனுபவங்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படும், புது செயல்களைக் கற்றுக்கொள்ளலாம். எனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் மாணவர்களின் கடமைகள் ஆகும்.

**எம்.நர்மதா**
**உயர்நிலை 4 விரைவு**

## முன் செல்லடா!

நாம் பல திரைப்படப் பாடல்களைக் கேட்டிருப்போம். அவற்றுள் என்னை மிகவும் கவர்ந்தது உதயநிதி ஸ்டாலின் நடித்த 'மனிதன்' என்னும் திரைப்படத்தில் வரும் ஊக்கமூட்டும் 'முன் செல்லடா! எனும் பாடல். இந்தப் பாடலில் வரும் அனைத்து வரிகளும் என்னை மிகவும் கவர்ந்தன. அவற்றுள் சில வரிகளும் அவை வலியுறுத்தும் பொருள்களும் இங்கே!.

'முன் செல்லடா! முன்னே செல்லடா!, தைரியமே துணை'; என்ற வரி எதிர்காலச் சவால்கள் எப்போதும் பெரியவையாகத்தான் இருக்கும். ஆனால், அவற்றையும் மீறி சவால்களை எதிர்கொண்டால்தான் வாழ்வில் வெற்றி கிடைக்கும் என்று கூறுகிறது.

'தோல்விகளும் காயங்களும் செதுக்கிடுமே உன்னை' என்ற வரி தோல்விதான் வெற்றிக்கான முதற்படி என்பதை வலியுறுத்துகின்றது. மேலும், அதே பாடலில் வரும் 'பலர் சேர்ந்து உன்னைப் பின்னே இழுத்தாலும் முன்னே செல்லடா!' என்ற வரி நீ என்றைக்கும் வெற்றிக்கான முயற்சியைக் கைவிடாதே. அம்முயற்சி பிற்காலத்தில் உனக்குக் கைகொடுக்கும் என்று கூறுகின்றது. 'விதியின் மேல் பழியைப் போடாமல் உன்மேல் போடு' எனற வரி நீங்கள் செய்யும் தவற்றை மறந்து விதியின் மேல் பழி போடாதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கும் அதில் அடையும் வெற்றிக்கும் நீங்கள்தான் பொறுப்பு என்கிறது.

**தமிழிலக்கியா**
**உயர்நிலை 3 உயர்தமிழ்**

## பூப்பறிக்க வருகிறோம்!

குழு 1 : பூப்பறிக்க வருகிறோம்
பூப்பறிக்க வருகிறோம்
குழு 2 : எந்த ஊருக்கு வருகிறீர்
எந்த ஊருக்கு வருகிறீர்
குழு 1 : சிங்கைக்கு வருகிறோம்
சிங்கைக்கு வருகிறோம்
குழு 2 : எந்தக் கிழமையில் வருகிறீர்
எந்தக் கிழமையில் வருகிறீர்
குழு 1 : திங்கட்கிழமை வருகிறோம்
திங்கட்கிழமை வருகிறோம்
குழு 2 : எத்தனைப் பூக்கள் பறிக்கிறீர்
எத்தனைப் பூக்கள் பறிக்கிறீர்
குழு 1 : மூன்று பூக்கள் பறிக்கிறோம்
மூன்று பூக்கள் பறிக்கிறோம்
குழு 2 : எந்த நிறப் பூ பறிக்கிறீர்
எந்த நிறப் பூ பறிக்கிறீர்
குழு 1 : ஊதா நிறப் பூ பறிக்கிறோம்
ஊதா நிறப் பூ பறிக்கிறோம்

**அதிதி**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**



அணி : 1 மாணவர்களே! மாணவர்களே!
அணி : 2 இளையர்களே! இளையர்களே!
அணி : 1 என்ன பாடம் வேண்டும்
என்ன பாடம் வேண்டும்
அணி : 2 ஆத்திசூடி பாடம் வேண்டும்
ஆத்திசூடி பாடம் வேண்டும்
அணி : 1 ஆத்திசூடி பாடம் வேண்டாம்
ஆத்திசூடி பாடம் வேண்டாம்
அணி : 2 என்ன பாடம் வேண்டும்
என்ன பாடம் வேண்டும்
அணி : 1 இலக்கணப் பாடம் வேண்டும்
இலக்கணப் பாடம் வேண்டும்

**ஹரிதா**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**

குழு 1 : பூப்பறிக்க வருகிறோம்
பூப்பறிக்க வருகிறோம்
குழு 2 : வீர வீரர்களே
வீர வீரர்களே
குழு 1 : ஆயுதங்கள் இருக்கா?
ஆயுதங்கள் இருக்கா?
குழு 2 : ரத்தம் சிந்தக் கூடாது
ரத்தம் சிந்தக் கூடாது
குழு 1 : மக்களுக்கே நாம்
மக்களுக்கே நாம்
குழு 2 : நாமே மக்கள்
நாமே மக்கள்

**சாதனா இளையராஜா**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**

பூனை: எலியம்மா எலியம்மா
நீ எங்கே இருக்கிறாய்?
எலி : பூனையாரே பூனையாரே
சிங்கையென்ற
சிறந்த நாட்டில் இருக்கிறேன்
பூனை : எலியம்மா எலியம்மா
அங்கே என்ன செய்கிறீர்கள்?
எலி : பூனையாரே பூனையாரே
நான் பாரம்பரிய விளையாட்டைக்
கற்றுக்கொண்டிருக்கிறேன்
பூனை : எலியம்மா எலியம்மா
என்னுடன் உலகத்தைச்
சுற்ற வருகிறாயா?
எலி : இல்லை இல்லை நான்
உலகத்தைச் சுற்ற வரவில்லை
பூனை : எலியம்மா எலியம்மா
ஏன் வரமாட்டேன் என்கிறீர்?
எலி : உலகைச் சுற்ற வந்து
உயிரைப் போக்க விரும்பவில்லை

**வசந்த குமார்**

## பிழையும் – சரியும்

| பிழை | சரி |
|---|---|
| ☒ அடமழை | ☑ அடைமழை |
| ☒ அகண்ட | ☑ அகன்ற |
| ☒ உந்தன் | ☑ உன்றன் |
| ☒ கோர்த்து | ☑ கோத்து |
| ☒ நாகரீகம் | ☑ நாகரிகம் |
| ☒ வெண்ணை | ☑ வெண்ணெய் |

## உடல் அமைச்சரவை!

இறைவன் கொடுத்த இந்த உடல் அமைப்பை ஓர் அமைச்சரவைக்கு ஒப்பாகச் சொல்லலாம். இதில் மூளை முதலமைச்சர். தலை– கல்வி அமைச்சர், கண்-சட்ட அமைச்சர், காது-தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர், மூக்கு- சுகாதராரத்துறை அமைச்சர், பல்– மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கைகள்-தொழில் துறை அமைச்சர், இதயம்- நிதி அமைச்சர், தோல்- பாதுகாப்பு அமைச்சர், கால்- போக்குவரத்துத்துறை அமைச்சர், வயிறு– உணவுத்துறை அமைச்சர், நுரையீரல்- சுற்றுச்சூழல் துறை அமைச்சர் என உடம்பில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் செய்யும் பணி மகத்தானது. இவ்வளவு சிறப்பான உடம்பைப் போற்றிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமை அல்லவா?